திருச்சி மாநகராட்சியில்

# நாய்களுக்கு கு.க. செய்வதில் மெகா மோசடி

## டிஆர்ஓவிடம் பரபரப்பு புகார்

திருச்சி, ஜூன்29-

திருச்சி மாநகராட்சி பகுதியில் நாய்களுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யும் திட்டத்தில் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது. இது பற்றி விசாரிக்க வேண்டும் என புகார் மனு கொடுக்கப்பட்டது.


திருச்சி மாவட்ட வருவாய் அதிகாரி தர்ப்பகராஜ் இன்று மக்கள் குறை கேட்பு முகாம் நடத்தினர். அப்போது திருவானைக்காவலை சேர்ந்த காருண்யா விலங்குகள் நல அமைப்பு நிர்வாகி சதீஷ் ஒரு மனு கொடுத்தார். அதில் கூறியிருப்பதாவது:

திருவானைக்காவலில் 28 தெருக்கள் உள்ளன. இங்கு தெருநாய்கள் 200க்கும் மேல் சுற்றித் திரிகின்றன. மாநகராட்சி சார்பில் பல முறை நாய்களை கு.க. செய்ய பிடித்து செல்கிறார்கள். ஆனால் அந்த நாய்களுக்கு கு.க. செய்ததாக தெரியவில்லை. நாய்களுக்கு கு.க. செய்யும் மையம் திருச்சி பாலக்கரை பழைய மதுரை ரோட்டில் உள்ளது. அந்த மையம் ஒரு வருடமாக பூட்டியே கிடக்கிறது. எங்கு வைத்து கு.க. செய்கிறார்கள் என தெரியவில்லை. ஒரு நாய்க்கு கு.க. செய்ய மத்திய அரசு ரூ.700 வழங்குகிறது. ஆனால் திருச்சி மாநகராட்சியோ ஒரு நாய்க்கு ரூ.441 ரூபாய் தான் வழங்குகிறது. இது பற்றி மாநகராட்சி அதிகாரியிடம் கேட்டால் இவ்வளவு தான் தர முடியும் என்கிறார்.

இது பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தெரு நாய்களை கட்டுப்படுத்தாவிட்டால் பொதுமக்களுக்கு வியாதிகள், துன்பங்கள் ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறிஉள்ளார்.

இது குறித்து விலங்குகள் நல அமைப்பு நிர்வாகிகள் சிலர் கூறும்போது, ‘குடும்ப கட்டுப்பாடு செய்ய நாய்களை பிடித்து செல்வதாக கூறுகிறார்கள். ஒரு ஏரியாவில் பிடிக்கும் நாய்களை இன்னொரு பகுதிக்கு கொண்டு சென்று விட்டு விடுவார்கள். இல்லாவிட்டால், பஞ்சப்பூர் 4 வழிச்சாலையில் விட்டு விடுகிறார்கள். அங்கு வரும் வாகனங்களில் அடிபட்டு பல நாய்கள் செத்து போய் விடுகிறது நாய்களுக்கு கு.க. செய்வதில் பெரிய அளவு மோசடி நடந்துள்ளது. இது பற்றி விசாரித்தால் இதில் யார், யாருக்கு பங்கு உள்ளது என தெரியவரும்’ என்றனர்.



தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கு.க. செய்வதில் மோசடி நடந்துள்ளது என டிஆர்ஓவிடம் மனு கொடுத்த விலங்குகள் நல அமைப்பு நிர்வாகி சதீஷ்.

Another complaint

Another complaint

Another complaint

Another complaint